# டிசைன் ஃபார் சேஞ்ச்: ஒரு வார பாடத் திட்டம்

அன்புள்ள ஆசிரியருக்கு,

உங்கள் வகுப்பறைக்கு டிசைன் ஃபார் சேஞ்ச்-ஐக் கொண்டு வருவதற்கு வகை புரியும் ஒரு வாரப் பாடத்திட்டம் பின் வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.


டிஎஃப்சி-யின் 4 படி செயல்முறையாகிய உணருங்கள், கற்பனை செய்யுங்கள், செயல்படுத்துங்கள் மற்றும் பகிர்ந்து கொள்ளுங்கள் ஆகியவை, ஒவ்வொன்றும் 45 நிமிட கால அவகாசம் கொண்ட, உங்களுக்குத் தேவைப்பட்டால் அதிக நேரமும் செலவழிக்கும்படியான, 7 பாடங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் உங்கள் குறிப்புக்காக மட்டுமே, நீங்கள் இதை உங்கள் மாணவர்களின் தேவைக்குத் தகுந்தாற்போல் மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

குழந்தைகள், ஒரு சிறந்த உலகை அமைக்க, தங்களுடைய யோசனைகளை உருவாக்கி, அவற்றைச் செயல்படுத்த நீங்கள் உதவுவதற்காக நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம். எல்லா குழந்தைகளையும் இதில் ஆர்வமாக பங்கேற்கச் செய்யவும், ஒவ்வொருவரின் யோசனைகளும் கேட்கப்படட்டும். அவர்களால் என்ன செய்யமுடியுமென்பதைப் பார்த்து நீங்கள் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டுப் போய்விடுவீர்கள், ஏனென்றால் –

**சூப்பர் ஹீரோக்கள் கதை புத்தகங்களில் இல்லை – என்னால் முடியும் என்று சொல்லும் ஒவ்வொரு குழந்தையிலும் இருக்கிறார்கள்.**


**குழந்தைகள் கற்றுக்கொள்ளும் திறன்கள்:** தலைமைப் பொறுப்பு, தொடர்பாடல், ஒருங்கிணைந்து பணிபுரிதல், விமர்சன மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனை.

## நாள் 1: நிஜ வாழ்க்கையில் சூப்பர் ஹீரோக்களை உணருங்கள்

| நாள் | நேரம் | விளக்கம் |
|---|---|---|
| 1 | 10 நிமிடம் | 1. குழந்தைகளிடம் அவர்களுக்குப் பிடித்த சூப்பர் ஹீரோ யார் என்று கேட்டு வகுப்பைத் தொடங்கவும். தங்களுக்கு யாரை மிகவும் பிடிக்கும் என்று சில மாணவர்களை பகிர்ந்து கொள்ள அனுமதிக்கவும்.<br>2. குழந்தைகளிடம், அவர்களுடைய சூப்பர் சக்தி என்ன என்று கேளுங்கள். நாம் ஒவ்வொருவருக்கும் நாம் சிறந்து விளங்கும் ஒரு சூப்பர் சக்தி உண்டு என்பதை அவர்களுக்கு விளக்குங்கள். உதாரணமாக, சிலருடைய சூப்பர் சக்தி, பிறருக்கு உதவி செய்வதாக இருக்கும், நன்றாகப் பாடுவது, அல்லது கணக்கு நன்றாகச் செய்வது போன்றவை.<br>3. பிறகு, சூப்பர் ஹீரோக்கள் கதை புத்தகங்களில் மட்டுமில்ல, அவர்கள் நிஜ வாழ்க்கையிலும் இருக்கிறார்கள், நீங்கள் அப்படிபட்ட சூப்பர் ஹீரோக்கள் சிலருடைய கதைகளை அவர்களுக்குக் காட்டப் போகிறீர்கள் என்றும் கூறவும். என்னால் முடியும் சூப்பர் சக்தி கொண்ட சூப்பர் ஹீரோக்கள்! |
|  | 20 நிமிடம் | **ஊக்குவித்தல் மற்றும் பிரச்சினையைக் கண்டறிதல்**<br><br>குழந்தைகளுக்கு சில டிஎஃப்சி விடியோக்களைக் காட்டவும். 3 விஷயங்களில் மாற்றத்தை ஏற்படுத்திய சில குழந்தைகளின் கதைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.<br><br>**குறிப்பு: உங்கள் வகுப்பறையில் இன்டெர்நெட் இல்லாத பட்சத்தில், சித்திரக்கதையாக சேர்க்கப்பட்டுள்ள கதையைப் படித்து குழந்தைகளுடன் பகிர்ந்துகொள்ளவும்.**<br><br>1. **தங்கள் வாழ்க்கையில் அவர்கள் மாற்ற விரும்பும் ஒரு விஷயம்:**<br>பள்ளிக்கூடப் பைகளின் எடையைக் குறைக்க: http://bit.ly/1mFr4xr<br>நண்பர்களுக்கு கால்பந்து கற்றுக்கொடுக்க : bit.ly/dfc-justforkicks<br>2. **தங்கள் பள்ளியில் அவர்கள் மாற்ற விரும்பும் ஒரு விஷயம் :**<br>ஆதரவு ஊழியர்களை மதிப்பது: http://bit.ly/Vfdmdi<br>பள்ளி கேண்டீனில் ஆகும் உணவு விரயத்தைத் தடுக்க: http://bit.ly/1sAKldt<br>3. **தங்கள் சமூகத்தில் அவர்கள் மாற்ற விரும்பும் ஒரு விஷயம்:**<br>குண்டும் குழியுமான சாலைகளை சரி செய்வது : http://bit.ly/potholes-on-the-road<br>குழந்தைகள் மழை நீர் சேமிப்பு அமைப்புகளை உருவாக்குவது : http://bit.ly/1kywiiQ |
| | 15 நிமிடம் | இந்த வீடியோக்களைக் காட்டியபிறகு, குழந்தைகளைத் தங்கள் சுற்றுப்புரத்தைப் பற்றி சிந்திக்கச் சொல்லுங்கள்.<br>அவர்களை அதிகம் பாதிப்பது எது? ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு பேப்பர் கொடுத்து, கீழ்க்கண்டவற்றில் அவர்கள் மாற்ற விரும்பும் 1 விஷயத்தைப் பற்றி எழுதச் சொல்லுங்கள். குப்பை, அல்லது அசுத்தமான சுற்றுப்புறம் போன்ற, அவர்களை நேரடியாக பாதிக்கும் பிரச்சினைகளைக் கண்டறிய அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.<br>1. சொந்த வாழ்க்கை (உதா. அவர்கள் கற்க விரும்பும் ஒரு புதிய திறன்)<br>2. பள்ளி(உதா. விளையாட்டு மைதானத்தில் கிண்டல் அல்லது கேண்டீனில் கூட்டம்)<br>3. சமூகம்(உதா. சுத்தமான குடிநீர் கிடைக்காதது) |


## நாள் 2: உணருங்கள்: உண்மையான சவாலைத் தெரிந்துகொள்ளுதல்

| நாள் | நேரம் | விளக்கம் |
|---|---|---|
| 2 | 20 நிமிடம் | 1. இன்று, குழந்தைகளைத் தாங்கள் நினைத்ததைப் பகிர்ந்துகொள்ளச் சொல்லவும், தங்கள் பெரிய யோசனைகளை போர்டில் எழுதச் சொல்லவும். வகுப்பில், 5 பேர் கொண்ட சிறிய குழுக்களை உருவாக்கவும். கலந்துரையாடலைத் தொடங்கவும், குழந்தைகள் அதனைத் தொடரட்டும்.<br><br>2. ஒவ்வொரு குழுவையும், தாங்கள் மாற்றத்தைக் காண விரும்பும் 1 சூழலுக்கு வாக்களிக்கச் செய்யவும். இறுதியில், ஒரு வகுப்பாக அவர்கள் பணிபுரிய விரும்பும் ஒரு சூழல் அல்லது பிரச்சினையைத் தேர்ந்தெடுக்கச் சொல்லவும். |
| | 25 நிமிடம் | **பிரச்சினையின் மூல காரணத்தைக் கண்டுபிடித்தல்**<br><br>1. குழந்தைகளை சிறு குழுக்களாகப் பிரித்து, அவர்கள் தேர்ந்தடுத்துள்ள பிரச்சினையின் பல காரணங்களைக் குறித்து குழுவாக யோசிக்கச் சொல்லவும்.<br><br>குழந்தைகள், அந்தப் பிரச்சினையின் மூல காரணத்தைப் புரிந்துகொள்ள உதவுங்கள். உதாரணமாக, அசுத்தமான சுற்றுப்புறத்தில், மூல காரணம், குப்பைகளைச் சரியாக நீக்காதது மட்டுமல்ல. குப்பைகளைத் தெருவில் வீசும் மக்களின் மனப்பான்மையே ஆகும்.<br><br>2. தாங்கள் தேர்ந்தெடுத்த பிரச்சினையால் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களை வெளியே சென்று பேட்டி எடுக்குமாறு குழந்தைகளை ஊக்குவிக்கவும். இது, அவர்கள் யாருக்காக தீர்வுகளை காணவிருகிக்கிறார்களோ அவர்களின் தேவைகளையும், கவலைகளையும் புரிந்துகொள்ள உதவும்.<br><br>குழந்தைகளுக்கு, திறந்த வகையான கேள்விகள் - அதாவது, சாதாரணமாக 'ஆமாம்' அல்லது 'இல்லை' என்ற பதில் அல்லாமல் நெடிய விளக்கம் தரும் வகையிலான கேள்விகள் கேட்பதன் முக்கியத்துவத்தை விளக்குங்கள். தங்கள் கேள்விகளில் 'ஏன்?' 'எப்படி?' ஆகிய சொற்களையும் சேர்த்துக்கொள்ளச் சொல்லவும்.<br><br>3. ஒவ்வொரு குழுவும் தாங்கள் கண்டறிந்ததை வகுப்பில் எடுத்துரைப்பார்கள், பிறகு, வகுப்பு முழுவதும், தாங்கள் தீர்க்க நினைக்கும் பிரச்சினையின் முக்கியக் காரணங்களை வாக்களித்துத் தேர்ந்தடுப்பார்கள். |



## நாள் 3: கற்பனை செய்யுங்கள்: வெற்றியைக் காட்சிப்படுத்துங்கள்


| நாள் | நேரம் | விளக்கம் |
|---|---|---|
| 3 | 45 நிமிடம் | 1. இன்றைய வகுப்பை ஒரு வேடிக்கை விளையாட்டுடன் தொடங்குங்கள்! 'நாற்காலியின் 100 பயன்கள்!'<br>ஒரு நாற்காலியை அறையின் நடுவில் வைத்துவிட்டு, மாணவர்களை, நாற்காலியை,அதன் மேல் உட்காருவதைத் தவிர அதைப் பயன்படுத்தும் சுவாரசியமான வழிகளின் ஒரு நீண்ட லிஸ்டை உருவாக்கச் சொல்லவும். வித்தியாசமாக யோசனை செய்வதற்கு இது அவர்களை தயார் செய்யும்.<br><br>2. குழந்தைகளை சிறு குழுக்களாகப் பிரித்து, அவர்கள் தேர்ந்தடுத்துள்ள பிரச்சினையின் பல காரணங்களைக் குறித்து குழுவாக யோசித்து அந்தப் பிரச்சினையின் பல்வேறு பகுதிகளுக்கு தீர்வு காணும் வகையில் 10 சுவாரசியமான யோசனைகளை முன்வைக்கச் சொல்லவும். பலவிதமான யோசனைகளை ஊக்குவிக்கவும். விழிப்புணர்வை ஏற்படுத்துவது, போஸ்டர்கள் செய்வது அல்லது ஊர்வலம் செல்வது போன்ற சாமானியத்தை விட்டு விலகி வித்தியாசமாக யோசிக்கச் சொல்லவும்.<br><br>3. பக்கம் 4-இல் இருக்கும் நடவடிக்கையைப் பார்த்து, குழந்தைகளை ஹார்ட் அண்ட் ஹேண்ட்ஸ் விளையாட்டை விளையாடச் செய்து, குழந்தைகள் அதிக யோசனைகளைக் கூற உதவலாம்.<br><br>4. அவர்கள் செயல்படுத்த விரும்பும் யோசனைகளை வாக்களித்துத் தேர்ந்தெடுக்கச் சொல்லவும். க்யூபிஎல் வழிமுறையில் வாக்களிக்கச் சொல்லவும்.<br>யோசனைகள், க்யூ – விரைவான தாக்கம் பி- தைரியமான யோசனை எல் – நீண்ட காலத் தாக்கம் கொண்டவையாக இருக்க வேண்டும். |



## நாள் 4: செயல்படுத்துங்கள்: மாற்றம் ஏற்படச் செய்யுங்கள்


| நாள் | நேரம் | விளக்கம் |
|---|---|---|
| 4 | 45 நிமிடம் | 1. குழந்தைகளுக்கு ஒரு செயல்பாட்டுத் திட்டத்தை உருவாக்க உதவி செய்யுங்கள். அவர்களுடைய திட்டத்தை செயல்பாட்டுப் படிகளாக பிரித்துக் கொள்ளச சொல்லுங்கள்.<br>2. குழந்தைகள், ஒவ்வொரு செயல்பாட்டுப் படியையும் எப்படி செய்து முடிக்கப் போகிறார்கள் என்று கேளுங்கள்.<br>ஒரு செயல்பாட்டுப் படியை தெளிவாகவும், விவரமாகவும் யோசிக்க அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவர்களுக்குத் தேவையான சாதனங்களின் லிஸ்டை தயாரிக்கச் சொல்லவும்.<br>அவற்றை அவர்கள் எப்படிப் பெறுவார்கள்?<br>எத்தனை பேர் தேவைப்படுவார்கள்?<br>எவ்வளவு நேரமாகும்? தங்கள் வேலைகளை அவர்கள் எப்படிப் பதிவு செய்வார்கள்?<br>3. குழந்தைகளை, பொறுப்புகளை பங்கிட்டுக் கொள்ளச் சொல்லுங்கள் : எந்த வேலையை யார் செய்வார்கள்?<br>திட்டத்தை ஒரு நேரக்கோட்டில் குறித்துக்கொள்ளுமாறு குழந்தைகளுக்குச் சொல்லவும்: எந்த வேலையை எவ்வளவு நேரத்தில் முடிப்பார்கள்? |

## நாள் 5 & 6: செயல்படுத்துங்கள்: மாற்றம் ஏற்படச் செய்யுங்கள்

| நாள் | நேரம் | விளக்கம் |
|---|---|---|
| 5 & 6<br> | 90 நிமிடம் | 1. குழந்தைகள் வெளியில் சென்று தங்கள் திட்டத்தை செயல்படுத்துவார்கள். அவர்கள் நினைத்திருந்த பல்வேறு தீர்வுகளையும் முயன்று பார்க்க ஊக்குவியுங்கள். சில யோசனைகள் திட்டமிட்டபடி நடக்காவிட்டாலும் பரவாயில்லை. தங்களுடைய தோல்விகளிலிருந்தும் அவர்கள் கற்றுக்கொள்வார்கள். அவர்களை ஊக்குவித்த வண்ணம் இருங்கள். திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வையில் உங்கள் ஆதரவை வழங்குங்கள்.<br>2. **குழந்தைகளுடைய பணியைப் பதிவு செய்யுங்கள்.** குழந்தைகள், களத்தில் தங்கள் வேலையைச் செய்துகொண்டிருக்கும்போது, தாங்கள் செய்யும் வேலையைப் பதிவு செய்வதற்காக அவர்களிடம் கேமராவும் மற்ற உபகரணங்களும் இருக்கின்றனவா என்று உறுதி செய்து கொள்ளவும்.அவர்கள் கொணரும் மாற்றத்தின் ஒவ்வொரு அம்ஸத்தையும் பதிவு செய்துகொள்ளச் சொல்லுங்கள்.<br>3. செயல்பாட்டுக்குப் பிறகு, சிந்திக்கச் சொல்லி ஊக்குவியுங்கள்.எது நன்றாக நடந்தது? எந்த வேலையை இன்னும் சிறப்பாகச் செய்யலாம்? குழந்தைகள் தாங்கள் கற்றுக்கொண்டதைப் பகிர்ந்துகொள்ளச் சொல்லவும். அந்தச் சூழலைப் பற்றியும், தங்களைப் பற்றியும் என்ன கற்றுக்கொண்டார்கள் என்று அவர்களிடம் கேட்கவும். |

ஆசிரியருக்கான குறிப்பு: இந்த செயல்படுத்துங்கள் நிலையில், வாரக்கடைசியிலும், பள்ளி முடிந்த பின்னும் நீங்கள் குழந்தைகளுக்காக நேரம் ஒதுக்கும்படி நேரலாம். குழந்தைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிராஜக்டைப் பொறுத்து, நீங்கள் அதற்குத் தகுந்தபடி அவர்கள் நேரத்தை திட்டமிட்டு சாத்தியமாக்கலாம்.

## நாள் 7: பகிர்ந்து கொள்ளுங்கள்: என்னால் முடியும்! இப்பொழுது உங்களாலும் முடியும்!

| நாள் | நேரம் | விளக்கம் |
|---|---|---|
| 7<br> | 45 நிமிடம் | **முன்னோக்கிச் சென்று, உங்கள் கதையை உலகத்துடன் பகிர்ந்துகொள்ளுங்கள்:**<br>challenge.dfcworld.com மூலமாக குழந்தைகளை, கடந்த ஒரு வாரத்தில், தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை பதிவு செய்யச் சொல்லுங்கள்.<br>டிஎ.ஃ.ப்சி-யின் சமர்ப்பித்தல் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு அவர்களை பதிலளிக்கச் சொல்லுங்கள்.<br>**இவற்றில் ஏதாவது ஒன்றை நீங்கள் இணைக்கலாம்:**<br>புகைப்படம் & எழுத்துப் பதிவுகள் (ஒவ்வொரு படிக்கும் அதிகபட்சம் 4 புகைப்படங்கள்)<br>வீடியோ/யூடியூப் லிங்க் (அதிகபட்சம் 3 நிமிடம்)<br>வெற்றியடைய வாழ்த்துக்கள்! |

DESIGN for CHANGE INDIA Parle-G

# நடவடிக்கை: உடனடி சூப்பர் ஹீரோக்கள்

**குறிக்கோள்:** 'டிசைன் ஃபார் சேஞ்ச்' செயல்முறையைப் பயிற்சி செய்ய
**தேவையான பொருட்கள்:** போஸ்டர் போர்டு, மார்கர்கள், பந்துகள்

அறிமுகம்: 'சூப்பர் ஹீரோக்கள் மற்றும் சூப்பர் சக்திகள்' குறித்து உரையாடவும். நம்முடைய சூப்பர் சக்திகள் என்ன? உலகை இன்னும் சிறந்த இடமாகச் செய்ய நாம் நமது சூப்பர் சக்தியை எப்படிப் பயன்படுத்துவது?

**விளையாட்டு: பிரச்சினைகளின் வட்டம்:**
குழந்தைகளை ஒரு பெரிய வட்டமாக நிற்கச் சொல்லுங்கள். பங்கேற்பாளர்கள் பந்தை ஒருவருக்கொருவர் வீசிக்கொள்வார்கள். எந்த மாணவரிடம் பந்து இருக்கிறதோ, அந்த மாணவர், தன்னை வருத்தப்படுத்திய, கோபப்படுத்திய அல்லது கவலைப்படுத்திய ஏதாவது ஒன்றைப்பற்றிக் கூறவேண்டும். பிறகு பந்தை அடுத்த நபருக்கு வீசவேண்டும். எல்லோரும் ஒரு விஷயத்தை சொல்லி முடிக்கும் வரையில் இதைத் தொடரவேண்டும். இதில் கூறப்படும் சூழ்நிலைகளை குறித்து வைத்துக் கொள்ளவும்.

**உதாரணமாக, குழந்தைகள்** "மதிய உணவு இடைவேளையில் என்னால் விளையாட முடியவில்லை என்பது எனக்கு சோகமாக இருந்தது" "பெரிய வகுப்பு மாணவர்,கேண்டீனுக்கு முதலில் செல்ல சிறிய வகுப்பு மாணவரை தள்ளி விட்டதைப் பார்த்த போது", "தாயில்லாமல் இருக்கும் தெரு நாய்க்குட்டியைப் பார்த்தபோது" "வகுப்பில் என் பக்கத்தில் உட்கார யாருமில்லாதபோது", எனக்கு வீட்டுப்பாடம் கொடுப்பது பிடிக்காது", "மைதானத்தில் தங்களுடைய குப்பைகளை மக்கள் எரிவதைப் பார்க்கும்போது", "தெருவில் பிச்சைக்காரர்களைப் பார்க்கும்போது" போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளலாம்.

## விளையாட்டு: துப்பறியும் நிபுணராகுங்கள், மூல காரணத்தைக் கண்டுபிடியுங்கள்

குழந்தைகள் கூறும் பிரச்சினைகளில் வாக்கெடுப்பு நடத்தி, 4-6 பிரச்சினைகளைத் தேர்ந்தெடுக்கவும். அவர்கள் அதிகம் கவலை **கொள்ளும் பிரச்சினையின் அடிப்படையில், வகுப்பை சிறு குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பந்து கொடுக்கப்படும்.**

1. பந்தை ஒவ்வொரு மாணவருக்கும் கொடுத்து, அந்தப் பிரச்சினையைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள், அது அவர்களை ஏன் பாதிக்கிறது என்று கேளுங்கள்.
   **உதாரணம்: மதிய உணவு இடைவேளை**
   வெளியில் மழை பெய்து கொண்டிருந்தால் ஒன்றும் செய்யமுடியாது என்று நினைக்கிறேன், சில சமயங்களில் உடன் விளையாட நண்பர்கள் இருக்க மாட்டார்கள், சில சமயங்களில் எல்லோரும் விளையாடும்படியான விளையாட்டுகள் இருக்காது அல்லது பெரிய குழந்தைகள் நல்ல விளையாடும் இடங்களை எடுத்துக்கொள்வார்கள், நமக்கு விளையாட இடம் இருக்காது.

2. **வாக்களிப்பு நடத்தி மதிய உணவு இடைவேளையைப் பற்றி அவர்கள் குழுவாக மாற்ற விரும்புவதைத் தேர்ந்தெடுக்கச் சொல்லுங்கள்.**
   **இப்போது பிரச்சினையை விவரமாக ஆராயத் தொடங்குங்கள். பிரச்சினையின் மூல காரணத்தை இது போன்ற கேள்விகளைக் கேட்டு கண்டுபிடியுங்கள்**
   பிரச்சினை **என்ன**? உதா: மழை காலங்களில் மதிய உணவு இடைவேளையில் பொழுது போகவில்லை
   இதனால் **யார்** பதிக்கப்படுகிறார்கள்? எல்லோரும்.
   இது **எத்தனை முறை** நடக்கிறது? மழை காலத்தில் ஒரு மாதம்
   இது **எப்போது** நடக்கிறது? வெளியில் விளையாட முடியாத அளவு வானிலை மோசமாக ஆகும்போது.
   இதனால் ஏற்படும் **விளைவு என்ன**? குழந்தைகள் சத்தம் போட்டு, நடைபாதைகளில் ஓடுகிறார்கள்.
   **இது ஏன் நடக்கிறது?** நடைபாதைகளை கண்காணிக்க யாரும் இல்லை. உள்ளே விளையாட விளையாட்டுகள் இல்லை.

   **இப்பொழுது பிரச்சினையின் மூல காரணம் புரிந்துவிட்டது, இது செயலில் இறங்கும் நேரம்!**

## விளையாட்டு: ஹார்ட் அண்ட் ஹேன்ட


மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவுக்கும் சார்ட் பேப்பர்களையும் மார்க்கர்களையும் விநியோகிக்கவும்.

**மாணவர்களை, அவர்கள் தேர்ந்தெடுத்த பிரச்சினையையும், 'என்னால் முடியும்' என்ற சொற்களையும் நடுவில் எழுதச் சொல்லவும்.**
**மாணவர்களை தங்கள் கைகள் மற்றும் பாதங்களின் அச்சுகளையும் ஒரு "ஸ்மைலியையும்" வரையச் சொல்லவும்.**
வரைந்த கைக்குள், தங்கள் கைகளால் பிரச்சினையை தீர்க்க என்ன செய்ய முடியும் என்று எழுதச் சொல்லவும். அதே போல் கால்களுக்குள்ளும் பிரச்சினையைத் தீர்க்க தங்கள் கால்களால் என்ன செய்ய முடியும் என்று எழுதச் சொல்லவும். ஸ்மைலிக்குள், தங்களுடைய பேச்சாற்றலால் என்ன மாற்றத்தைக் கொண்டு வரமுடியும் என்று எழுதச் **சொல்லவும்.பிரச்சினையைத் தீர்க்க எந்த மாதிரியான சூப்பர் ஹீரோ குணங்களை அவர்கள் பயன்படுத்தலாம்?**
உதாரணம்: மழைக்காலத்தில் பள்ளி இடைவேளைகள்
**கைகள்:** நாம் வகுப்புக்குள் இருக்கும்போது விளையாட விளையாட்டுகளை உருவாக்கலாம். குழந்தைகளை ஓடவேண்டாம், கத்த வேண்டாம் என்று கூறும் ஸ்டிக்கர்கள் மற்றும் சைன்களைச் செய்து நடைபாதைகளில் ஒட்டலாம்.
**கால்கள்:** நடைபாதகளைக் கண்காணிக்க முறை அமைத்து மாணவர்களை நியமிக்கலாம்.
**பேச்சு:** இடைவேளைகளில் ஓடவோ கத்தவோ கூடாது என்னும் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். சில வகுப்புகளை ஒன்று சேர்த்து பாட்டுப் போட்டி நடத்துங்கள்.

# ஊக்கம் பெறுங்கள்

## ஆபத்தில் உதவும் நண்பன்




ஆனால், சில எதிர்பாராத சூழ்நிலைகளால், குழந்தைகளால் நாய்களுக்கு உதவும் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த முடியவில்லை. ஆனால் அவர்கள் துவண்டுவிடவில்லை.
நாம், இப்போதைக்கு நம் பறவை நண்பர்களுக்கு உதவி செய்வோம்.
ஆமாம்! இப்போது மழை பெய்து கொண்டிருக்கிறது, கூடுகளிலிருந்து கீழே விழுந்து காயமடைந்த பறவைகளைப் பார்த்தேன்.
குழந்தைகள் வீட்டில் விழுந்துகிடக்கும் தேவையில்லாத பொருட்களை வைத்து பறவை வீடுகள் மற்றும் பறவை உணவு வழங்கிகளைத் தயாரிக்கத் தொடங்கினார்கள்.
வீட்டில் விழுந்துகிடக்கும் தேவையில்லாத பொருட்களை வைத்து நாம் பறவை வீடுகள் தயாரிப்போம்.
ஆமாம். நாம் தேவையில்லாத பொருட்களை மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துவதால் நமக்கு பணமும் செலவாகாது.


பறவைகளுக்கு அவர்களுடைய புதிய வீடு மிகவும் பிடிக்கும்.
அதுவும் அவற்றில் ஊஞ்சல்கள் இருப்பதால்!
சிறுவர்கள் பறவைகளுக்கு உணவு வழங்கியையும் செய்து பறவை வீட்டில் பொறுத்தினார்கள். விளைவுகளைக் கண்டு அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.
இது உண்மையிலேயே மிகவும் அழகாக உள்ளது.
நம்மால் தேவையற்றதிலிருந்து உபயோகமானவற்றைச் செய்ய முடிந்தது.


சில நாட்களுக்குப் பிறகு, சிறுவர்கள் தங்கள் ப்ராஜக்ட் எப்படி இருக்கிறது என்று பார்க்க வந்தனர். உணவு வழங்கிகளில் ஒன்றை யாரோ திருடிவிட்டதை அறிந்து அதிர்ச்சியடைந்தனர்.
அடுத்தமுறை பறவை வீட்டை மரத்தின் மேல் உயரத்தில் வைக்கவேண்டும்.
ஆமாம், இதனால் நம் நண்பர்கள் மழையிலிருந்தும் திருடர்களிடமிருந்தும் பாதுகாப்பாக இருப்பார்கள்.
அங்கு பார், ஒரு பறவை ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டிருக்கிறது!
கூடவே ஒரு அணிலும் இருக்கிறது!
சிறுவர்கள், நேரம் கிடைத்த போது இன்னும் சில பறவை வீடுகளையும், உணவு வழங்கிகளையும் செய்ய முடிவெடுத்தனர்.
ஆனால், நாங்கள் மாற்றமாக இருந்ததையே மிகவும் விரும்பினோம்.
எங்கள் பறவை நண்பர்களுக்கு உதவியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.
மரத்தின் மேல் ஏறியது எனக்குப் பிடித்திருந்தது.